# பஞ்சபட்சி

## அகத்தியர்



# அகத்தியர் பஞ்சபட்சி - முன்னுரை



நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி வழக்கொழிந்துள்ள அரிய நூல்களின் வரிசையில் ஒன்றான நுண்கலைக் காவியமாம் "ஐம்புள் நூல்" தருகிறோம். பிரளயம் மெய்யோ? பொய்யோ? தெரியாது. இருப்பினும் பல பழய நூல்கள் குறித்துள்ளபடி பிரளயம் வந்தபின் மிஞ்சியிருக்கும் அறிவுசீவிகளுக்கு நம் முன்னோர் எந்தவகையிலும் அறிவில் குறைந்தவரல்லர் என்று எடுத்துக்காட்டும் சாற்றிறங்களை விட்டுச்செல்லும் நோக்குடனே, எம்முடைய கைப்படியிலிருந்து தருகிறோம்.

"பட்சி அறிந்தவனைப் பன்னிப் பகைத்து நிதம்
கட்சி புரிவோர் கருத்தழிவர் - குட்சி
எறியக் குலைத்துக் கெடுவர்காண் மண்ணில்
வறியராய் நொந்தலைவர் மற்று."

## ஞானவெட்டியான்



மின்னஞ்சல் : njaanam@gmail.com

இணையதளம் : http://siththan.com/

# அகத்தியர் பஞ்சபட்சி - முன்னுரை



தகவிலர் யாரேனும் இதை அரைகுறையாகப் புரிந்துகொண்டு பாவித்தால், இதன் பின் விளைவுகள் மிக மோசமாக இருக்கும் என எச்சரிக்கை விடுத்தபின் தந்தோம். நேர்வழியில் பாவிக்க வாழ்வு வளமாகும்.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு."

இவ்வுலகே ஐந்து பூதங்களால் ஏற்பட்டது.
அவை:நிலம்,நீர்,அக்கினி,வாயு,ஆகாயம் ஆகும். பெரும்பாலானவைகள் இவ்வைந்து கூறுகளாகவே பிரிக்கப்பட்டு உள்ளன.

சித்தாந்த சிகாமணி கூறுகிறது:

"ஐம்பூதம் ஐம்பொறிக ளோடைம் புலனமர்ந்த
ஐந்தெனுங் கர்மேந்திரிய மைவர்கா ரணராம்
ஐந்தெனுந் தொழிலைம் பெரும்பிரமங்க ளனைத்தும்
ஐந்தெழுத்தில் உணர்த்துவர் அறிவ ரறிந்தவரே."

ஆக, ஐம்பூதம், ஐம்பொறிகள், ஐம்புலன்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்தொழில், ஐந்தெழுத்து ஆகியவைக்கு ஐவர் காரணராம். இதன் சூக்குமம் நமசிவய என்னும் ஐந்தெழுத்தில் உள்ளது.

இவ்வாறே, மானுட இனத்தையும் பிறந்த நட்சேத்திரங்களை அடிப்படையாக வைத்து ஐந்து பிரிவுகளாகப் பிரித்தனர்.

# அகத்தியர் பஞ்சபட்சி - முன்னுரை



ஒவ்வொரு பிரிவையும் அடையாளம்காண ஒரு பறவையின் பெயரைக் கொடுத்தனர். அந்த நட்சேத்திரத்தில் பிறந்தவனுக்குண்டான குணநலன்களைக் கணக்கில் கொண்டு, அதேவகை குணநலன்களையுடைய பறவையைத் தெரிவு செய்தனர்.
அவைகள்: வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் ஆகும்.

ஆக, எப்பறவையின்கீழ் ஒருவன் பிறந்தானோ அவனுக்கு அப்பறவையின் குணநலன்கள் இருக்கும். பறவைகள் உருவகமே. பறவை அரசாளும் என்றால் அப்பறவை அரசனாகவியலாது. இவ்வைந்து பறவைகளும் பகலில் ஐந்துசெயல்களையும் இரவில் ஐந்துசெயல்களையும் செய்யும். ஆனால், செயல்கள் ஐந்துதான். வளர்பிறைக்கும், தேய்பிறைக்கும் தொழில்கள் மாறும். அவையாவன: உண்ணும், நடக்கும், தூங்கும், அரசாளும், இறக்கும். இதை, ஊண், நடை, நித்திரை, அரசு, மரித்தல் என்பர்.

இவை மறைமுகமாக, அப்பறவைக்கும் அதைன்கீழ் பிறந்த மனிதனுக்கும் அப்பொழுதுக்கு உள்ள பலத்தைக் குறிக்கும். அரசு என்றால் பலம்கூடியும், மரிக்குமெனில் பலமிழந்த நிலையில் உள்ளது எனவும் கொள்ளவேண்டும். எவ்வளவு நேரத்திற்கு இது நிலைத்திருக்கும்? என்னும் வினாவெழுகிறது அல்லவா?

ஒரு மாதத்திற்கு 2 பட்சங்கள். அவை: பூர்வ பட்சமாகிய வளர்பிறையும், அமரபட்சமாகிய தேய்பிறையுமாம். ஒவ்வொரு பட்சத்திற்கும் 15 திதிகள் (அதாவது 15 நாட்கள்). ஒரு நாளைக்குப் பத்து சாமங்கள். ஒவ்வொரு சாமத்திற்கும் 6 நாழிகைகள். ஒரு நாளைக்கு, பகல் 30 நாழிகை; இரவு 30 நாழிகை; ஆக மொத்தம் 60 நாழிகை. ஆக, பகல் 5 சாமம், இரவு 5 சாமம். சாமம் ஒன்றுக்கு நாழிகை 6. பகல் 12மணியை 30ஆல் வகுக்க வரும் 24 நிமிடங்கள். இவ்வாறாக, நாழிகை ஒன்றுக்கு 24 நிமிடங்கள் எனக் கணக்கிடல் வேண்டும்.

# அகத்தியர் பஞ்சபட்சி - முன்னுரை



உலகில் அண்டம் பிண்டம் உண்டல்லவா? அதிலும் பிண்டத்திலும், சூக்கும, அதிசூக்கும, காரண உடல்களும் உண்டல்லவா? அதுபோல ஒரு பறவை உண்ணுவதற்கு 6 நாழிகை எடுத்துக் கொண்டாலும், அதில் சூக்குமமாக உண்ணுதற்குக் கொஞ்சம் காலமும், நடப்பதற்குக் கொஞ்சம் காலமும், அரசாளக் கொஞ்சம் காலமும் எடுத்துக் கொள்ளும். இதையே, பஞ்சபட்சி சாற்றிறத்தில், ஊணில் நடை, ஊணில் அரசு, என்றும் கூறுவதியல்பு. இதை, சாதக ரீதியாக விளக்கினால், சூரிய திசையில் சந்திர புத்தி என்றும், குரு திசையில் கேது புத்தி என்றும் கொள்ளலாம். சோதிடம் அறிந்தவர்கள் இன்னுமொரு வினாவெழுப்பலாம். அதாவது, சூரிய திசையில் சந்திர புத்தி; அது சரி; ஆனால் என்ன அந்தரம்? என வினவினால் இன்னும் சற்று ஆழமாகச் சென்று, 24 நிமிடங்களையும் கூறிடல் வேண்டும். இதையே, ஊணில் நடையில் அரசு, ஊணில் அரசில் நித்திரை என்றும் பிரிக்கலாம். இன்னும் குழப்பாமல் மேலே செல்வோம்.

இப்பஞ்சபட்சி சாற்றிறத்தில், திதிப் பிரிவு, அட்சரப் புணர்ச்சி, பட்சிப் புணர்ச்சி, அட்டயோனிப் பொருத்தம், எழுத்தலங்காரப் பொருத்தம், நாமயோனிப் பொருத்தம், வெற்றி தோல்விநிலை, அருக்கனிலை, பட்சியின் வலிமை, படுபட்சிகள்(இறக்கும் பட்சிகள்), பட்சிகளின் செயல்கள், பட்சி பாகம் இவ்வாறு பலவற்றை இச்சாற்றிறம் இயம்புகிறது. இதை முறையாகக் கற்றுணர, சாற்றிறப் பூட்டுக்களை உடைக்க, இறையருளும், நல்ல விவரங்களறிந்த குருவும் நிச்சயம் வேண்டும். கற்றபின், நல்ல காரியங்களுக்கு மட்டுமே உபயோகித்தல் வேண்டும். இதனால், நாம் இந்த நொடியில் என்ன நிலயில் உள்ளோம்?, நம் பலம் யாது?, செய்யும் செயல்களினால் நமக்கு நன்மை கிடைக்குமா?, வெற்றி கிட்டுமா?, தோல்வியாகுமா? எனவறிந்து, "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவு" காத்திருந்து காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம்.

# அகத்தியர் பஞ்சபட்சி - முன்னுரை



இதன் சூக்குமத்தை நன்குணர்ந்தவர்கள், இதனால் அந்நொடியில் என்ன சரம் ஓடுகிறது எனத் தெரிந்துகொண்டு, அதை மாற்றிக் கொள்ளுவர். அது யோகத்திற்கும் பலனளிக்கும். ஞானம் கிட்டும். இதுவே இச்சாற்றிறத்தின் தலையாய பயன்.

**எனக்குத் தெரிந்தவரை யாரும் பஞ்சபட்சி சற்றிறத்தைக் கரைத்துக் குடித்தவரில்லை.**

என் குருபிரான் கூறியது:" சுட்டிக் காட்டிவிட்டேன். தவத்தில் (தவம் செய்யும் முறை ஔவைக் குறளில் காண்க) இருந்து அன்னை வாலாம்பிகைகையை அழைத்துக் கொள்; அவள் கருணையைப் பெற முயலு;

கிட்டிடின் கிட்டிடும் பேறு. இல்லையேல் கிட்டாதாயின் வெட்டென மற."

இதையே, உங்களுக்கும் கூறி அகத்தியரின் பஞ்சபட்சி சாற்றிறத்ததைத் தருகிறேன்.

தயவு செய்து, அரைகுறையாகப் புரிந்துகொண்டு சோதனை செய்து தீங்கை விலைக்கு வாங்க வேண்டாம் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

# அகத்தியர் பஞ்சபட்சி

## பொருளடக்கம்




| | பொருளடக்கம் | பாடல் |
|---|---|---|
| 1 | காப்பு | 1 |
| 2 | பஞ்சபட்சிகளும் அதற்குரிய எழுத்துக்களும் | 2 |
| 3 | பட்சிகளின் செய்கை | 3 |
| 4 | நத்தை முதலிய திதிப் பிரிவு | 7 |
| 5 | சந்திரன் பக்கம் 5 க்கும் வாரம் 7 க்கும் அட்சரப் புணர்ச்சி | 8 |
| 6 | அட்சரம் 5 க்கும் பட்சிப் புணர்ச்சி | 9 |
| 7 | அட்டவித யோனிப் பொருத்தம் | 10 |
| 8 | அட்சர அலங்காரப் பொருத்தம் | 11 |
| 9 | நாமயோனிப் பொருத்தம் | 12 |
| 10 | அருக்கனிலை | 14 |
| 11 | பட்சி வலிவு | 15 |
| 12 | பூர்வபட்சக் கவி | 16 |
| 13 | அமரபட்சக் கவி | 17 |
| 14 | வளர்பிறை - பகல் - ஊண் பட்சிகள் | 18 |
| 15 | படு பட்சிகள் | 19 |
| 16 | பட்சிகளின் செய்கை | 20 |
| 17 | ஞாயிறு செவ்வாய் பகல் | 21 |
| 18 | சனி பகல் | 22 |
| 19 | வெள்ளி பகல் | 23 |
| 20 | வியாழன் பகல் | 24 |

# அகத்தியர் பஞ்சபட்சி

## பொருளடக்கம்




| | பொருளடக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| 21 | திங்கள் புதன் பகல் | 25 | |
| 22 | வளர்பிறை - இரவு - ஊண் பட்சிகள் | 26 | |
| 23 | கடைநிலைப் பட்சிகள் | 27 | |
| 24 | ஞாயிறு செவ்வாய் இரவு | 28 | |
| 25 | திங்கள் புதன் இரவு | 29 | |
| 26 | வியாழன் இரவு | 30 | |
| 27 | வெள்ளி இரவு | 31 | |
| 28 | சனி இரவு | 32 | |
| 29 | தேய்பிறை பகல் ஊண் பட்சி | 33 | |
| 30 | இராப்பகல் 60 நாழிகைக்கு படுபட்சி | 34 | |
| 31 | பட்சிகளின் செய்கை | 35 | |
| 32 | திங்கள் சனி பகல் | 36 | |
| 33 | வியாழன் பகல் | 37 | |
| 34 | செவ்வாய் ஞாயிறு பகல் | 38 | |
| 35 | வெள்ளி பகல் | 39 | |
| 36 | புதன் பகல் | 40 | |
| | தேய்பிறை வாரங்கள் 7 க்கும் இராக்கவி | | |
| 37 | ஊண் பட்சிகள் | 41 | |
| 38 | கடைநிலைப் பட்சிகள் | 42 | |
| 39 | திங்கள் சனி இரவு | 43 | |
| 40 | வெள்ளி இரவு | 44 | |

# அகத்தியர் பஞ்சபட்சி
## பொருளடக்கம்




| | பொருளடக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| 41 | புதன் இரவு | 45 | |
| 42 | வியாழன் இரவு | 46 | |
| 43 | செவ்வாய் ஞாயிறு இரவு | 47 | |
| | வளர்பிறை - பட்சிகளின் செய்கை | | |
| 44 | உண்டியின் பலன் | 48 | |
| 45 | நடையின் பலன் | 49 | |
| 46 | அரசின் பலன் | 50 | |
| 47 | தூங்கும் பலன் | 51 | |
| 48 | துஞ்சும் பலன் | 52 | |
| | தேய்பிறை | | |
| 49 | ஊண் பலன் | 53 | |
| 50 | நடையின் பலன் | 54 | |
| 51 | அரசின் பலன் | 55 | |
| 52 | தூக்கத்தின் பலன் | 56 | |
| 53 | மரணத்தின் பலன் | 57 | |
| 54 | சூக்கும பட்சி | 58 | |
| 55 | வயதின் பலன் | 59 | |
| 56 | அங்கிஷ பலன் | 60 | |
| 57 | உருவ நிதானப் பலன் | 61 | |
| 58 | வலுவின் பலன் | 62 | |
| 59 | வெற்றியின் பலன் | 63 | |

# அகத்தியர் பஞ்சபட்சி

## பொருளடக்கம்




| | பொருளடக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| 60 | இருவருள் வெல்லுஞ் செய்கைப் பலன் | 64 | |
| 61 | பருவ நிதானப் பலன் | 65 | |
| 62 | ஓட்டுஞ் செய்கைப் பலன் | 66 | |
| 63 | வளர்பிறை நிறப் பட்சி | 67 | |
| 64 | தேய்பிறை - நிறப்பட்சி | 68 | |
| 65 | வளர்பிறை - சாதிப் பட்சி | 69 | |
| 66 | தேய்பிறை - சாதிப்பட்சி | 70 | |
| 67 | வளர்பிறை - தேய்பிறை - தாதுமூலப் பட்சி | 71 | |
| 68 | வளர்பிறை - பூதப்பட்சி | 72 | |
| 69 | தேய்பிறை - பூதப்பட்சி | 73 | |
| 70 | முடுகு பட்சி | 74 | |
| 71 | மாய்க்கும் பட்சி | 75 | |
| 72 | பகைப் பட்சி | 76 | |
| 73 | உறவுப் பட்சி | 77 | |
| 74 | காலப் பட்சி | 78 | |
| 75 | கோணப் பட்சி | 79 | |
| 76 | சுவைப் பட்சி | 80 | |
| 77 | நிலப் பட்சி | 81 | |
| 78 | இடப் பட்சி | 82 | |
| 79 | பஞ்சலோகப் பட்சி | 83 | |
| 80 | வினைய பட்சி | 84 | |

# அகத்தியர் பஞ்சபட்சி

## பொருளடக்கம்




| | பொருளடக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| 81 | கெடுதி அறிகுறி | 85 | |
| 82 | இனப் பட்சி | 86 | |
| 83 | வளர்பிறை - திசைப் பட்சி | 87 | |
| 84 | தேய்பிறை - திசைப் பட்சி | 88 | |
| 85 | பவுர்ணமி திசைப் பட்சி | 89 | |
| 86 | அகார சத்தம் | 90 | |
| 87 | இகாரச் சத்தம் | 91 | |
| 88 | உகாரச் சத்தம் | 92 | |
| 89 | எகாரச் சத்தம் | 93 | |
| 90 | ஒகாரச் சத்தம் | 94 | |
| | அமிர்த நிலை | | |
| 91 | பிரதமை - அடி | 95 | |
| 92 | துதிகை - பரடு | 96 | |
| 93 | திரிதிகை - கணைக்கால் | 97 | |
| 94 | சதுர்த்தசி - முழந்தாள், இடை | 98 | |
| 95 | பஞ்சமி - துடை, உந்தி | 99 | |
| 96 | சஷ்டி - நிதம்பம், கீழ் வயிறு | 100 | |
| 97 | சப்தமி - இடை, கீழ்முதுகு | 101 | |
| 98 | அஷ்டமி - உந்தி, வயிறு | 102 | |
| 99 | நவமி - மார்பு, வயிறு | 103 | |

# அகத்தியர் பஞ்சபட்சி
## பொருளடக்கம்




| | பொருளடக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| 100 | தசமி - கை | 104 | |
| 101 | ஏகாதசி - பாளியங்கை | 105 | |
| 102 | துவாதசி - விரல் | 106 | |
| 103 | திரயோதசி - கழுத்து | 107 | |
| 104 | சதுர்த்தசி - தலை | 108 | |
| 105 | பூரணை - கூந்தல் | 109 | |
| 106 | பட்சியின் வயது | 110 | |
| 107 | நட்சத்திரப் பட்சி | 111 | |
| 108 | ஆரூடக் கணிதப்பட்சி | 112 | |
| 109 | வளர்பிறை - இராப்பட்சி | 113 | |
| 110 | தேய்பிறை - இராப்பட்சி | 114 | |
| | பட்சிகளின் கணித இலக்கணம் | | |
| 111 | வல்லூறு | 115 | |
| 112 | ஆந்தை | 116 | |
| 113 | காகம் | 117 | |
| 114 | கோழி | 118 | |
| 115 | மயில் | 119 | |
| 116 | பட்சி நாழிகை மாற்று | 120 | |
| 117 | பட்சி பாகம் | 121 | |
| 118 | மகாதிசை ஆண்டு | 122 | |

# அகத்தியர் பஞ்சபட்சி



| காப்பு |
| --- |
| உன்னியருவன் உரைத்த முதலெழுத்தைப்<br>பன்னிப் பறவையாய்ப் பாவித்து - வன்னி<br>உதைய திசைப்பட்சி யுண்மை யுரைக்கக்<br>கதை காவியப் பொருளே காப்பு. |
| துய்யமலருறையுந் தோகா யுன தைம்பொற்<br>செய்யமலர்ப் பாதஞ் சேவித்தேன் - வையத்<br>தைந்து வகைப்பட்சி யமையுங் குணமென்றன்<br>சிந்தை தனினிற்கவே செய். |
| ஒன்று திசைக்குருவி யன்றிவரு மோர்தூதன்<br>நின்றநிலை யாருடத்தில் நேருமே - நன்று<br>வழுவா துரைதாயும் வல்லவர்கள் சொன்ன<br>முழுவா கடத்தின் முறை. |

| | |
|---|---|
| 1 | மொழிக்கு முதலெழுத்தே முன்னுதிக்கு மாமதனைப்<br>பழித்தவலன் றன்னிலையும் பார்த்து - வழிபெறவே<br>பேரால் வருவனவும் பேதமறிந் துணர்ந்து<br>ஆராய்ந்து சொல்வ தறி. |
| 2 | பஞ்சபட்சிகளும் அதற்குரிய எழுத்துக்களும்<br>**************************************************<br><br>அகரமே வல்லூறு ஆந்தை இகரமதாம்<br>உகரங் கருங்காக முன்னிப் - பகரில்<br>எகரமது கோழி யெஞ்ஞான்று மஞ்ஞை<br>ஒகார முயர் மெய்யாந் துரை. |
| 3 | பட்சிகளின் செய்கை<br>************************<br><br>ஊணடையரசு நித்திரை மரணம் உயிர்பகலிரவினிலுண்டு<br>நீணிலத்தரசு செய்துபின் சென்று நெறியுடனடந்து மேயுறங்கும்<br>பூணுறும்மர பக்க நற்பகலூண் பொன்றியுந் துயின்றரசாகிக்<br>சேணுறு நடையுண் டுறங்கியே சென்றுஞ் செத்தர சாளுநல்லிரவே. |
| 4 | ஒன்றேகா லொன்ரறையீ ரொன்று முக்காலரையும்<br>நன்றாக வ்வ்வாறு நாழிகையுங் - குன்றாத<br>வளர்பிறைக்குந் தேய்பிறைக்கும் வாலாய மாஞ்சூட்ச<br>வளமுரைத்தார் முன்னோர் வகுத்து.<br><br>(இச் சாற்றிறம் அகத்தியர் காலத்திற்கு முன்னமேயே வளர்ந்து<br>வாழ்ந்திருத்தல் வேண்டும்) |
| 5 | மறித்து மொருவகையால் வண்கடிகை யாறுந்<br>தெறித்ததொரு சூக்குமத்தைச் சேரக் - குறித்திடுங்கா<br>லுண்டு நடந்தாண் டுறங்கி யிறந்திடுமே<br>வண்டனைய கண்ணாய் மதி. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 6 | உண்பானுக் கொன்றேகா லொன்றரையிற் றானடக்க<br>கண்பார்த் தரசிரண்டிற் காண்போமே - பண்பாகத்<br>தூங்குவது முக்காலாய்த் துஞ்சுவது தானரையாய்ப்<br>பாங்குடைய பட்சி பலன். |
| 7 | நத்தை முதலிய திதிப் பிரிவு<br>********************************<br><br>வினவின் முதற்றி தியாறும் பதினொன்று நத்தை<br>மேலிரண்டேழ் பன்னிரண்டும் விளங்கும் பத்திரையா<br>மினியதொரு மூன்றெட்டும் பதிமூன்றுஞ் சயையா<br>மிருத்தை யென்பா னாந்கிலுட நவமி பதினான்கை<br>புனைகுழலாய்ப் பஞ்சமியும் பத்துமுவரத் தரமும்<br>பூரணை மென் மறியலவன் கோன் மகரஞ் சரமாந்<br>தனிவிடை தேள் குடஞ்சிங்கம் நிலைராசி சாகுந்<br>தனுமிதுனங் கன்னியுமீ னுபய மெனத்தகுமே. |
| 8 | சந்திரன் பக்கம் 5 க்கும் வாரம் 7 க்கும் அட்சரப் புணர்ச்சி<br>*****************************************************************<br><br>ஊர்கோணத்தைக் கதிர்செவ்வாய் அகரமோங் கும்பத்திரையாம்<br>தேர்கோளருணன் மதி இகரஞ் சயையும்பொன்னும் உகரமதாம்<br>வேர்கோளிருத்தைப் புகர் எகரம் வெய்யசனிபூரணை ஒகரம்<br>ஏர்கோளிடையாய் பகற்கடிகை யிவ்வாறிவையூண்சொன்னோமே. |
| 9 | அட்சரம் 5 க்கும் பட்சிப் புணர்ச்சி<br>**************************************<br><br>சொன்னவகரம் வல்லூறூண் துய்ய இகரமாந்தையிணூண்<br>முன்னை உகரங் கொடியூணா மொழியிலெகரங் கோழியிணூண்<br>பன்னுமெகர மஞ்ஞையிணூண் பண்டையடையவே பறவைகளண்<br>றுண்ணுமிரண்டு நடைமுடி மூன்றுறக்க நான்குசாவைந்தே. |
| 10 | அட்டவித யோனிப் பொருத்தம்<br>************************************<br><br>சாய்ந்த அகரங்ககரமுடன் சகரந்தகரந் தந்நகரம்<br>வாய்ந்தபகர மகரமுடன் வகரமிவை யெட்டெழுத்தாகும்<br>ஆய்ந்தபருந்து முதல் யோனியிரு நான்கினுக்குமடைவாக<br>வேய்ந்த பொருத்தம் வெற்றியுடனிதனாற் பறவையியம்பிடுமே. |

முன்னுரை | பொருளடக்கம்

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 11 | அட்சர அலங்காரப் பொருத்தம்<br>*************************************<br><br>இயம்புமுத லெழுத்தேபால னிரண்டது குமரன்மூன்றே<br>வயம்புரப்போனு நான்கு விருத்தனே மரணனைந்தாம்<br>பயன்கொடாப் பெயரெழுத்து மவன் பெயரெழுத்தும்பத்தால்<br>வியனுடன்றாக்கி யெட்டிற் கழித்தெனும் வெற்றிபாரே. |
| 12 | நாமயோனிப் பொருத்தம்<br>******************************<br><br>பேரெழுத்தெண்ணி யேழில் பெருக்கியே யெட்டிற்கீந்து<br>பாரமாய் நின்றசேடம் பருந்து முன்னாக வெண்ணி<br>நேரதேயோனியென்று நின்றது பகையதாகும்<br>ஏரதாங்கரி முன்னெண்ணி யியல்புடன் யோனிகாணே. |
| 13 | நாமயோனிப் பொருத்தம்<br>******************************<br><br>ஒருவரையருவர் வெல்ல வுபாயத்தை யறியவேண்டி<br>லிருவர் தம்பெயரிலுள்ள வியலெழுத்ததனை யெண்ணிப்<br>பெருகியபத்தினாலே பெருக்கியே யெட்டிற்கீயச்<br>சிறியவர் பெரியவற்குத் தோற்பது திண்ணந்தானே. |
| 14 | அருக்கனிலை<br>*****************<br><br>அருக்க நிலையாங் கருட னானதொரு பூனைச்<br>செருக்கினருஞ் சிங்கமொரு செங்கதிரோனே<br>கருக்கும்விழிநாக மெலிகார்ரனை முயலும் நாய்<br>இருக்குமிடமாய்ந்து பலனேயுரை செய்வீரே. |
| 15 | பட்சி வலிவு<br>***************<br><br>சித்திரை மூன்றுமாதம் சிற்றெலி பூனையாகும்<br>மற்றொரு மூன்றுமாதம் வருமுசல் நாயதாகும்<br>ஐப்பசி மூன்றுமாத மரியெதிரானை யாகும்<br>தையரு மூன்றுமாதஞ் சர்ப்பமுங் கருடனாமே. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 16 | பூர்வபட்சக் கவி<br>******************<br><br>அகரமேலாதியாக வைந்து குற்றெழுத்துந்தானே<br>புகல் வல்லூறாந்தை காக்கை பொற்கோழியடு கலாபி<br>தொகுமுண்டி போக்குவேந்து தூக்கமே நீக்குஞ் சாவாம்<br>பகருமைந்தெழுத்தில் யாதுபற்றினு மதுவே முன்னும். |
| 17 | அமரபட்சக் கவி<br>******************<br><br>பிற்பக்கமாகில்வேறு பேதிக்கும் யாதோவென்னில்<br>அற்புதவுண்டிசாவே யரிதுயிலரசு போக்கு<br>பொற்புறு மரணந் தூக்கமில்லாத பொழுதையோர்ந்து<br>பற்பலசெய்யுட்டானே பர்ந்திடின் மிகுந்த நன்மை. |
| 18 | வளர்பிறை - பகல் - ஊண் பட்சிகள்<br>******************************************<br><br>செவ்வாய்அருக்கன் வல்லூறூண் சிறந்த திங்கள்புதனாந்தை<br>கவ்வார்வியாழம் காரண்டங் கருதும் வெள்ளிகோழியதாம்<br>மவ்வார்சனியின் மயிலுண்ணும் வளரும் பகலுக்காராய்ந்து<br>மிவ்வாறிந்நூற்குறுமுனியு மியம்புங் கடலாருலகுக்கே. |
| 19 | படு பட்சிகள்<br>***************<br><br>அருக்கன்வெள்ளி முனிமரண மணிசேர் செம்பொற்காரியுட<br>னெருக்கும்வல்லூறே மரண நெறியாங்காகமதி மரணஞ்<br>செருக்குஞ்செவ்வாய் கோழியதாஞ் சேர்ந்தபுந்தி மயில்மரணம்<br>சுருக்குங்குழலாய் முற்பக்கம் கடிகையறுபான் சாவாமே. |
| 20 | பட்சிகளின் செய்கை<br>************************<br><br>உண்டுநடந்து உலகாண்டு நித்திரையாய்த்<br>தண்டமுற முற்பகலிற் சாவாகும் - உண்டு<br>அரசாயிருந்து அநேக வழி நடந்து<br>இரவாலுறங்கு மிடை. |

முன்னுரை | பொருளடக்கம்

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 21 | ஞாயிறு செவ்வாய் பகல்<br>****************************<br><br>வல்லூறுமுண்ண வாந்தை வழி நடக்க<br>நல்லசிறு காகமது நாடாளப் - பொல்லா<br>வுறக்கமது கோழி யன்றொடி யீரீங்கே<br>யிறக்கு மயிலென்றே யியம்பு. |
| 22 | சனி பகல்<br>***********<br><br>காந்த மயிலுண்ணக் கதித்தகுரல் வல்லூறு<br>தோந்தமுடனே நடக்கத் தூய்மொழியீ - ராந்தை<br>யரசுபதியா மருங்காகந் தூங்கச்<br>சரசம் பொற்கோழியது சாம். |
| 23 | வெள்ளி பகல்<br>****************<br><br>கோழி யமுதுண்ணக் குதித்து மயில்நடக்க<br>வாழு மரசனாம் வல்லூறு - தோழிகே<br>ளாந்தையுறங்க வருங் காகந் தானிறக்க<br>மாந்தர்க் கழகாய் மதி. |
| 24 | வியாழன் பகல்<br>*****************<br><br>காரண்ட முண்ணக் கருங்கோழி தானடக்க<br>வேருண்ட மாமயிலும் வேந்தாகுஞ் - சீரிரண்டும்<br>வல்லூறு தூங்க வலுவாந்தை தானிறக்கச்<br>சொல்லூறு காட்டுந் தொகை. |
| 25 | திங்கள் புதன் பகல்<br>**********************<br><br>ஆந்தை யமுதுண்ண வருங்காகந் தானடக்க<br>போய்ந்திருந்த கோழியது பூபதியாஞ் - சாந்த<br>மயிலுமுறங்க மடியுமேவல் லூறு<br>பயிலப் புதுமையெனப் பார். |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 26 | வளர்பிறை - இரவு - ஊண் பட்சிகள்<br>*****************************************<br><br>ஞாயிறுசெவ்வாய் காரண்ட நல்லபுந்திமதி கோழி<br>மாயப்பொன்னே மயிலாகும் வளரும் வெள்ளி வல்லூறாம்<br>ஓயாவாந்தை சனியுண்ணு முயருங் கங்குலுணர் கென்ன<br>ஆயும்வேதக் குறுமுனிவ னருளாலிசைத்த வரும்பொருளே. |
| 27 | கடைநிலைப் பட்சிகள்<br>**************************<br><br>அந்திதனிற் செவ்வா யருக்க னருங்காகம்<br>புந்திமதி கோழி பொன்மயிலாம் - பைந்தொடியீர்<br>சுக்கிரனும் வல்லூறு தூயசனியா மாந்தை<br>பக்கி நின்ற திந்தப்படி. |
| 28 | ஞாயிறு செவ்வாய் இரவு<br>*****************************<br><br>காகம துண்ணக் காராந்தை தானரசாய்<br>வாகான வல்லூறு மாண்டுவிழத் - தோகாய்கேள்<br>போக மயினடக்க பொற்கோழி கண்டுயிலப்<br>பாகமுட னாய்ந்தறிந்து பார். |
| 29 | திங்கள் புதன் இரவு<br>***********************<br><br>கோழி யமுதுண்ணக் கூர்வாய் சமரசமாய்ச்<br>சேழியதா மாந்தையது செத்துவிடுந் - தோழீகேள்<br>வல்லூறு மேகுமே மாமயிற் றூங்குமே<br>சல்லாப மிக்குமே தான். |
| 30 | வியாழன் இரவு<br>*******************<br><br>தோகை யமுதுண்ணச் சொற்கோழி தானரசாய்க்<br>காகமது செத்துவிழக் கண்டோமே - ஆகையினா<br>லாந்தையது நடக்கும் வல்லூறுந் தூங்குமெனச்<br>சாய்ந்தமுலை யாயறிந்து சார். |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 31 | வெள்ளி இரவு<br>****************<br><br>வல்லூறு முண்ண மாமயிலுந் தானரசாய்ப்<br>பொல்லாத கொழியது போயிறக்க - நல்லாய்க்கேள்<br>காரண்டந் தானடக்கக் கண்டுயிலு மேயாந்தை<br>சீரண்ட மாலுண்டு சேர். |
| 32 | சனி இரவு<br>************<br><br>ஆந்தை யமுதுண்ணும் வல்லூறரசு செயுஞ்<br>சாந்த மயிலதுவுஞ் செத்துவிழும் - ஏந்திழையீர்<br>கோழியது நடக்குங் கொம்பார்ந்த காகமது<br>வீழும் விழிதுயின்று மேல். |
| 33 | தேய்பிறை பகல் ஊண் பட்சி<br>*****************************<br><br>திங்கட் சனிமயிலாஞ் சேயருக்கன் கோழியதாம்<br>பொங்கு புதன்காகம் போசனமா - மங்கையே<br>அந்தணனுக் காந்தை யணிபுகர்க்கும் வல்லூறு<br>சந்தமும் பிற் பகற்கே சாற்று. |
| 34 | இராப்பகல் 60 நாழிகைக்கு படுபட்சி<br>*******************************************<br><br>கூறிடுந் திங்களாந்தை குலவுசேய் வல்லூறு<br>மீறிய வருக்கன் காகம் வெள்ளியும் - புதனுமஞ்ஞை<br>யேறியசனி வியாழங் கோழியா மியம்புங்காலை<br>யாறுபத்தாகுங் கன்ன லதிற் சாகும மரபக்கம். |
| 35 | பட்சிகளின் செய்கை<br>***********************<br><br>உண்டுடனே செத்து முறங்கிய ரசாண்டும்<br>விண்டு நடக்கும் விழிமடவீ - ரன்றிரவில்<br>உண்டு முறங்கு முடனே நடத்திறக்குங்<br>கண்டரசனாகு மெனக் காண். |

முன்னுரை | பொருளடக்கம்

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 36 | திங்கள் சனி பகல்<br>********************<br><br>வரியார் மயிலுண்ண மாலாகு மாந்தை<br>திரியாதோ தேசமெலாஞ் சென்று - பெரிய<br>வாரணமே மண்ணாள வல்லூறு தானுறங்கக்<br>காரணத்தாற் காக்கை சாங் காண். |
| 37 | வியாழன் பகல்<br>*****************<br><br>கண்டாந்தை யுண்ணக் கருங்கோழி தானடக்க<br>வண்டாயுண் வல்லூறு மன்னவனாய் - விண்ட<br>விழிமூடுமே காகம் வீணாக மஞ்ஞை<br>பழிதேட வேயிறக்கும் பார். |
| 38 | செவ்வாய் ஞாயிறு பகல்<br>***************************<br><br>சொற்கோழி யுண்ணத் தொடர்ந்தேகும் வல்லூறு<br>நற்காக நன்றாக நாடாளும் - பொற்காவின்<br>மண்ணின் மயிலுறங்க மாலாந்தையே மரணம்<br>எண் ணுமறிவா லெடு. |
| 39 | வெள்ளி பகல்<br>****************<br><br>வந்த பிற் பக்கத்தில் வல்லூறு முண்ணவே<br>முந்து கருங்காக முடனேகும் - அந்தமயி<br>லாளுமே பூமியது வாந்தையே கண்டுயிலு<br>மாளுமே கோழியதே வந்து. |
| 40 | புதன் பகல்<br>*************<br><br>தண்காக முண்ணத் தனிமயிலுந் தானடக்க<br>மண்காவ லாந்தையது வந்தாளப் - பெண்கொடியே<br>கோழியுறங்கக் குல வலியானே சாக<br>வாழி புதனுக் கெனவே வை. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 41 | தேய்பிறை வாரங்கள் 7 க்கும் இராக்கவி<br>***********************************************<br><br>ஊண் பட்சிகள்<br>*****************<br><br>மந்தன் சோமன் கோழியினூண் மானேவெள்ளி மயிலுண்ணும்<br>புந்தியாந்தைப் போசனமாம் பொன்னிற்காக மிரையருந்தும்<br>சிந்தைமகிழச் சேயிரவி தினத்தேவல்லூ றமுதுசெயும்<br>அந்தித்தோன்றும் பிற்பக்கத்தடைவே சொன்னோமறி நன்றே. |
| 42 | கடைநிலைப் பட்சிகள்<br>***************************<br><br>வாரணம் பொன்னேகாரி மயில்புகர் புதனேமிக்கச்<br>சீரணிகாகம் வெய்யோன் சிறந்தமாமுனி யாந்திங்கள்<br>பேரணிவலியன் செவ்வாய்ப் பிற்பக்கத் திரவிற்றங்கும்<br>ஏரணி குழலாயென்று மிடமறிந்தியம் புவாயே. |
| 43 | திங்கள் சனி இரவு<br>**********************<br><br>சேவல் புசிக்கத் திரியுமே யாந்தையது<br>மாவிற் புவியாளு மாமயிலுங் - கூவி<br>யுறங்குமே காக்கையுடனி றக்குமே வலியன்<br>கறங்கு மேகக் கலையாய் காண். |
| 44 | வெள்ளி இரவு<br>*****************<br><br>அல்லின் மயிலுண்ண வார்ந்து நடக்குங்காகம்<br>வல்லம் புவியாளும் வாரணமு - மில்லுறங்கு<br>மாந்தையது சாகுமன்ன நடைக் கன்னன்மொழி<br>யேந்திழையா யென்னே இடர். |
| 45 | புதன் இரவு<br>**************<br><br>வகுத்த மினியுண்ண மஞ்ஞையது நடக்கச்<br><br>செகத்திற் கொடியரசு செய்யவே - நகைத்துத்<br>தூங்குமே வல்லூறு துஞ்சுமே செஞ்சேவல்<br>மாங்குயிலே யென்னா மதி. |

| | |
|---|---|
| 46 | வியாழன் இரவு<br>******************<br><br>செப்பக் காரண்டந்தான் றின்னநடக்கும் வலியான்<br>தப்பிலாக்கோழி தரையாளும் - ஒப்பிலா<br>மாலாந்தை கண்டுயிலும் வாழ்மயிலுஞ் சாவாகும்<br>சேலார்விழி மடவீர் செப்பு. |
| 47 | செவ்வாய் ஞாயிறு இரவு<br>****************************<br><br>வல்லூறினிதுண்ண வார்கோழியே நடக்க<br>நல்லாந்தை வந்திருந்து நாடாளப் - பொல்லாத்<br>தூக்கமுறு மயிலாஞ் சொல்ல விழுங்காகத்<br>தாக்கமலைப் பொடியாந் தான். |
| 48 | வளர்பிறை - பட்சிகளின் செய்கை<br>**************************************<br><br>உண்டியின் பலன்<br>*********************<br><br>போசனமாகில் பதிவாழும் போனார்மீள்வார் போங்கவலை<br>காசினிவாழுமீ மழைபொழியுங் களவுமில்லைக் கதிர்விளையும்<br>பேசிற்கன்னிப் பேறாகும் பிணியுந்தீரும் பெண்பெறுவள்<br>வாசிசெழும் பொன்வாணிபமாம் மன்னரைவெல்வாய் மாங்குயிலே. |
| 49 | நடையின் பலன்<br>*******************<br><br>யாத்திரையாகில்லை நிலைகுலையு மொன்னார் வெல்வரிருநீதிபோங்<br>காத்திரமில்லாக் கதிர்விளையுங் கன்னியர்வாழ்க்கை நன்றாகா<br>மாத்திரள்செல்லும் பொருள் கூடாவேட்கை தவழ்ந்துமணங்கூடா<br>சூத்திரஞ் சொன்னபடியாலே சொன்னார்பெரியோர் சுரிகுழலே. |
| 50 | அரசின் பலன்<br>****************<br><br>அரசேசெய்யிற் புவிப்பேராம் அரசராலே பலனெய்து<br>முரசுமதிரும் வரிசையுடன்மூண்ட கருமந்தான் விலகும்<br>பரிசும்பெரியோர் திறலிடுவர் பழையபிணி போம்பயமில்லை<br>புரைபோங் களவுந்தான் காணும்போக்குமில்லை புரிகுழலே. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 51 | தூங்கும் பலன்<br>****************<br><br>தூங்குமாகில் நோய்மாறா தூரம்போனார் தாம்மீளார்<br>ஆங்கேகரும நன்றாகா வரிவைவாழ்க்கைத் தாழ்வாகுந்<br>தீங்கேயல்லால் மழைபொழியாச் செந்நெல்விளையாச் செய்குறியீர்<br>ஓங்கிமணமுந் தாராதே யுண்மையாக வுரைத்தோமே. |
| 52 | துஞ்சும் பலன்<br>****************<br><br>துஞ்சுமாகிற் சாவுசொலுந் துலையாப்பிணியுந் தானெய்தும்<br>நெஞ்சினினைந்த பொருள்கூடா நிதியுங்காணார் நிலைகுலைவார்<br>வஞ்சநோயுமிக வுண்டாமனையாள் வெறுக்கிலு றவாகாள்<br>கஞ்சமலரார் குழலாளே கருத்தாயுரைத்த படியறியே. |
| 53 | தேய்பிறை ஊண் பலன்<br>****************************<br><br>கெடுதியுமுட னேகாணார் கிளையுடன் வாழ்வுபேறாம்<br>கடுகிய பிணியுந்தீருங் கலக்கமோ சற்றுமில்லை<br>அடைமழை பெருகவுண்டா மகமேற நிற்குந்தன்மை<br>முடுகிய பயணமில்லை மொழிந்தபின் நுண்ணுங்காலை. |
| 54 | நடையின் பலன்<br>*******************<br><br>வெற்றியுஞ்சுகமு முண்டாம் வியாதியும் மாற்றும்பின்பு<br>பற்றியகருமந் தானும் பயமில்லையக முந்தாழார்<br>உற்றதோர் கெடுதி காணாருறு மழையுண்டுதூரத்<br>துற்றவர் வரவுங்கூடச் சொல்லும் பின்னடக்கத்தோன்றில. |
| 55 | அரசின் பலன்<br>****************<br><br>ஜெயமொடு சுகமுமுண்டு சிறந்ததோர் பயணந்தன்னில்<br>புயலிடுமழையு மற்பம் புவிதனிற் கலக்கமில்லை<br>இயம்பினாற் பெறலாம்வெற்றி யிலாபமும் நீடுமாகும்<br>பயம்விளையாது நாளும் அரசதாம் பறவையாகில். |

| | |
|---|---|
| 56 | தூக்கத்தின் பலன்<br>********************<br><br>உன்னிடிற் பிணியுமல்லா லொருபிணி யதிகமாகும்<br>மண்ணில்மழையே யில்லை வையத்தில் கெடுதிகாணும்<br>துன்னிய நெஞ்சிற்றோடந் தோன்றிடுங் கருமஞ்செய்யும்<br>பன்னியே யுதிக்கும் பட்சிபயனுட னுறங்குமாகில். |
| 57 | மரணத்தின் பலன்<br>********************<br><br>காவினிற் பயமுமுண்டு கலகமாங் கருமமெல்லாம்<br>தீவினைபடு மற்றன்றிச் செய்யுநல் வினைகளாகாச்<br>சாவினில் விழுந்த பட்சி தனித்து வந்துதிப்பதாலே<br>பூவினிற்சிறந்த மாதே புகன்றனர் பள்ளினூலே. |
| 58 | சூக்கும பட்சி<br>***************<br><br>ஓதுகிலோ மாபட்சி யன்றுண்ணு மொன்றுயிர்போம்<br>ஏதுமிலா வொன்றையிலேகுமே - நீதிபுனை<br>நன்றி யுடநொன்றறையி நாடறியத் தானுறங்கும்<br>ஒன்று முதலாள் வதுலகு. |
| 59 | வயதின் பலன்<br>****************<br><br>போசனத்தில் மூத்தோனும் போய்நடக்கி லிளையோனும்<br>ஆசனத்தி னெடியோனு மாயவனை - மாசற்றுத்<br>தூங்குமவன் குள்ளன் றுஞ்சிடுமே யாமாகில்<br>அங்கி ருவரோ ராண்டறி. |
| 60 | அங்கிஷ பலன்<br>*****************<br><br>உண்கின்றான்பால நுயர்நடை யானே குமரன்<br>பண்பாமரசனே பாராள்வான் நண்பு பெறு<br>முற்றுந்துயில் கிழவன் மோனமுடிந்தோன் சாவோன்<br>பற்றுந் தவத்தின் பலன். |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 61 | உருவ நிதானப் பலன்<br>************************<br><br>ஊணினிலுயர்ந்தோன் வெல்வனுயர் நடைக்குள்ளன் வெல்வன்<br>காணுறு வெகுரோமத்தன் கடுகராச்சியத்தில் வெல்வன்<br>தானருந் தூக்கந்தன்னி ளிருவருள் வலுத்தோன் வெல்வன்<br>வேணுமோர் மரணந்தன்னுளிருவருள் வலுத்தோன் வெல்வன். |
| 62 | வலுவின் பலன்<br>*****************<br><br>ஊணில் நடைவலிது நடையி லரசுறுதி<br>நாணியுறங்கிடவு நன்றாகப் - பேணி<br>விலகுகுழலாளே யிறப்பும் பொல்லாதென்<br>றுலகு புகழவுரை. |
| 63 | வெற்றியின் பலன்<br>*********************<br><br>உண்பா னடப்பானை வெல்வ னடப்பானுந்<br>தன்பாலரசனையுந் தானழிப்பான் - மன்காத்<br>திருப்பான் றுயில்வானை வெல்லத் துயில்வோன்<br>மரிம்மானை வெல்வன் மதி. |
| 64 | இருவருள் வெல்லுஞ் செய்கைப் பலன்<br>*******************************************<br><br>நல்லூணாகிற் கிழவன்வெல்வ நடையேயாகிலிளவல் வெல்வான்<br>செல்லத்தூக்கமாமரசிற் சிறந்தோன் மிகவும் வென்றிடுவான்<br>எல்லாமரசேயாமாகி லிளையோன் வெல்வா னென்நாளும்<br>பொல்லாச் சாவேயாமாகிற் போனாரிருவர் மீளாரே. |
| 65 | பருவ நிதானப் பலன்<br>************************<br><br>உரைத்திடு மிருவர்பேரு மொரு பக்ஷ்ஷியுண்ணுமாகில்<br>நரைத்திடுமவனே வெல்வனடையினி னெடியோன் வெல்வன்<br>கருத்தரசிளை யோன்வெல்வன் கருங்குட்டன் துயிலில்வெல்வன்<br>மரித்திடச் சரியாமென்றே மாதவருரைத்தார் மாதே. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 66 | ஒட்டுஞ் செய்கைப் பலன்<br>****************************<br><br>உண்பான டப்பானை யோட்டு மிருவர்களும்<br>பண்பாம் பதியைப் பரிந்தோட்டும் - பெண்பாவாய்<br>துஞ்சினோர்க் கஞ்சுந் துயில்வோனை யாவருமே<br>யஞ்சலென் றழைத்திடு வாராம். |
| 67 | வளர்பிறை - நிறப் பட்சி<br>****************************<br><br>வல்லூறு பொன்னிறமாம் வாழாந்தை வெள்ளியதாம்<br>செல்லாருங் காகஞ் சிவப்ப்பாகு - நல்லாய்கேள்<br>கோழியுறு பச்சை குளிர்ந்தமயில் கறுப்பாம்<br>நாழி மணக்க நவில். |
| 68 | தேய்பிறை - நிறப்பட்சி<br>**************************<br><br>ஆந்தை சிவப்பாம் அணிகாகம் பொன்னிறமாம்<br>வாய்த்த பச்சை வண்ணமயிலாகும் - ஏந்திழையீர்<br>வெள்ளையாங்கோழி விளங்கு வரிகறுப்பு<br>வல்லூறாக் கொண்டு மதி. |
| 69 | வளர்பிறை - சாதிப் பட்சி<br>*****************************<br><br>வல்லூறு பார்ப்பான் வளராந்தை தான்வணிகன்<br>செல்லாருங் காகஞ் செகத்தரசன் - நல்லாய்க்கேள்<br>கோழியாம் வேளாளன் கூறுமயில் சண்டாளன்<br>ஆழியா நூலாய்ந் தறி. |
| 70 | தேய்பிறை - சாதிப்பட்சி<br>****************************<br><br>பொன்மறையோனும் வலியான் பேராந்தை வேந்தனும்<br>துன்னுமொழிகாகந் துலை வணிகன் - மன்னும்<br>உழுகுலத்தோன் கோழியே யோதுங்காண் மஞ்ஞை<br>இழிகுலத்தோ னென்றே யிசை. |

முன்னுரை | பொருளடக்கம்

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 71 | வளர்பிறை - தேய்பிறை - தாதுமூலப் பட்சி<br>**************************************************<br><br>வல்லூறு மூலம் வளராந்தை சீவனாஞ்<br>சல்லாபமாமாங் காகந் தாதுவாம் - பொல்லாத<br>கோழிமூலச் சீவன் கோலமயிற் றாதுவொடு<br>வாழு மூலஞ் சொல்லிவை. |
| 72 | வளர்பிறை - பூதப்பட்சி<br>***************************<br><br>வல்லூறு தேயுவாம் வல்லாந்தை வாயுவாம்<br>பொல்லாக் கருங்காகம் பூமியதாம் - நல்லாய்க்கேள்<br>நீராகும் கோழி நீலமயி லர்காயம்<br>காரார் குழலாய் கனி. |
| 73 | தேய்பிறை - பூதப்பட்சி<br>***************************<br><br>அரிய புவிவல்லூறு அப்பாகு மாந்தை<br>கரியதொரு காகங் கனலாகும் - பெரியகால்<br>தேனே சரிந்தொழுகுஞ் செஞ்சூட்டு வாரணந்தான்<br>வானே யகல மயில். |
| 74 | முடுகு பட்சி<br>**************<br><br>காகமுழு முடுகு வல்லூறு முக்காலாம்<br>ஆகறுமாந்தை யறைமுடுகாம் - வேகமுறும்<br>கோழியது கால்முடுகு கோலமயில ரைக்கால்<br>வாழு முடுகறிந்து வை. |
| 75 | மாய்க்கும் பட்சி<br>******************<br><br>மயிலுக்கு மாற்றாள் வலிதாந்தை கோழியதாம்<br>இயல்வலி தாங்கோழி யிரண்டுங் - கயலாகும்<br>முன்வலிது வல்லூறு நான்கினுக்குங் காக்கை<br>பின்வலி தாகுங்காண் பெயர்ந்து. |

| | |
|---|---|
| 76 | பகைப் பட்சி<br>***************<br><br>மயிற்பகை வல்லூறாந்தை கோழிக்குமது வேயாகுஞ்<br>செயிர்ப்பகை வலியற்காந்தை யாந்தைக்கு வலியன்றீயான்<br>இயற்றிய வலியனல்லா லெல்லாம் வல்லூறினுக்கே<br>உயிர்ப்பகையாகு மற்றதொந்தவை யுறவாமன்னே. |
| 77 | உறவுப் பட்சி<br>****************<br><br>மயிலுறவு வல்லூறு வன்காக்கைக் கோழி<br>செயலாக வல்லூறுஞ் சேர்காகம் - அயில்விழியாய்<br>கோழியுறவு மயில் கொள்ளு மெனவுரத்தார்<br>ஏழிநூல் வல்லோ ரிசைந்து. |
| 78 | காலப் பட்சி<br>**************<br><br>ஆந்தைமயில் முக்கால் ஆனதொரு வாரணந்தான்<br>சேர்ந்த நிகழ்காலஞ் செப்பிடுமே - வாய்ந்ததொரு<br>வல்லூறு காகம் வருங்காலங் காட்டுமே<br>வல்லோ ருரைத்த வகை. |
| 79 | கோணப் பட்சி<br>*****************<br><br>வல்லூறு நீள்வட்ட மாந்தை யைங்கோணம்<br>அல்லாருங்காக மறுகோணம் - மெல்லி நல்லாய்<br>கோழியது நாற்கோணங் கோலமயில் முக்கோணம்<br>ஊழியான் சொன்ன வுரை. |
| 80 | சுவைப் பட்சி<br>***************<br><br>தித்திக்கு மாந்தை சிறுபுளிப்புக் கோழியதாம்<br>எத்துங் கருங்காக மினிதுவர்ப்பாம் - பத்திக்க<br>வல்லூறு காகமயில் கைக்கு மென்பரே<br>அல்லார் குழ லாயறி. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 81 | நிலப் பட்சி<br>*************<br><br>வல்லூறு பாலை வளராந்தை வண்குறிஞ்சி<br>நல்லாருங்காக நடுமருதம் - மெல்லியரே<br>வாரணமே முல்லை வளருமயி னெய்தல்<br>ஆரணத்தோர் சொல்லா லறி. |
| 82 | இடப் பட்சி<br>*************<br><br>வல்லூறு வண்மை வளர்காக நீர்க்காலாம்<br>நல்ல திறலாந்தையது நாற்காலாம் - சொல்லக்<br>குறுங்கோழி கொம்பாங் குலவு மயில் பட்சி<br>பெறுங்கா ணிவையாய்ந்து பேசு. |
| 83 | பஞ்சலோகப் பட்சி<br>*********************<br><br>வல்லூறு பொன்னாம் வளராந்தை வெள்ளியதாம்<br>நெல்லார்ய்ங்காக நிறஞ் செம்பாம் - பொல்லாத<br>கோழியது வெண்கலமாங் கோலமயிலி ரும்பாம்<br>வாழி மடவார் வகை. |
| 84 | வினைய பட்சி<br>*****************<br><br>வல்லூறு வருகின்றான் மாமறையோன் தூரவந்தான்<br>நெல்லிக் கருங்காக நிற்கின்றான் - மெல்லியரே<br>கோழியே மீண்டான் குலவு மயிலுமரை<br>நாழிகையிலே வருவா னாடு. |
| 85 | கெடுதி அறிகுறி<br>******************<br><br>மன்னவன் வல்லூறாகின் மனிதர்கைப் புகுந்ததென்க<br>வெண்ணிய வாந்தையாகி லொண்டொடி யெடுத்தாளென்க<br>உண்ணிடுங்காகமாகி லொருவனே கொண்டா னென்க<br>வண்ணமார்கோழி யாணும் பூமியின்மயில்தான் பெண்ணே. |

முன்னுரை | பொருளடக்கம்

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 86 | இனப் பட்சி<br>**************<br><br>வல்லூறுகாக மயின் மூன்று மாணாகும்<br>நல்லதிரவுகோ லுஞ்சொன்னோம் - பொல்லாத<br>ஆந்தை பொற்கோழி பெண்ணாகுமிதே தோழி<br>செர்ந்தறிந்து சொல்லுந் திறம். |
| 87 | வளர்பிறை - திசைப் பட்சி<br>*****************************<br><br>உரைகிழக்கு வல்லூறு உயிராந்தை தெற்காம்<br>விரையங் கருங்காக மேற்காம் - புரைதீரக்<br>கொத்தியிரை விழுங்குங் கோழி வடக்காகு<br>மத்திபத்தி னிற்கு மயில். |
| 88 | தேய்பிறை - திசைப் பட்சி<br>*****************************<br><br>பச்சைமயில் மேற்காம் பாரில் வடக்காந்தையா<br>மிக்ககிழக்காகும் வல்லூறு - மெச்சு நல்ல<br>தெற்காகும் காகமது தேனார்விழி மடவாய்<br>பொற்கோழி மத்திபமாம் போற்று. |
| 89 | பவுர்ணமி திசைப் பட்சி<br>***************************<br><br>மத்திபத்தில் வல்லூறு வாழாந்தை தெற்காகும்<br>உற்றநிதி கிழக்கேயண் காகம் - சற்றிடமே<br>தெற்காகுங் கோழி சிறந்தமயின் மேற்காகும்<br>எக்காலுஞ் சாற்றுதற்கா மீடு. |
| 90 | அகார சத்தம்<br>***************<br><br>காணு மகாரப் பேரானுடைய கண்டமுதல்<br>காணுஞ் சிரசாந்தை கைகாகம் - பேணிக்<br>கோழியுடம்பு மயில் முன்பின்னாகும் வலியான்<br>தாழுமிரு சரணந்தான் இஉஎஒஅ |

| | |
|---|---|
| 91 | இகாரச் சத்தம்<br>*****************<br><br>தானாமி காரப்பே ரானுடைய கண்டமுதல்<br>கானார் தலைக்காகங் கைக்கோழி - மானாய்<br>உடனேமயின் முன்பின் வல்லூறாங் காலாந்தை<br>மடலே புரிவாய் வகு உஎஒஅஇ. |
| 92 | உகாரச் சத்தம்<br>****************<br><br>அண்டு முகாரப்பே ரானுடைய சென்னி முதல்<br>கண்டமாங் கோழியது கைமயிலாம் - உண்ப<br>வல்லூறுடன் முன்பின் வாழுமே யாந்தையது<br>நல்லகால் காகமாய் நாட்டு எஒஅஇஉ. |
| 93 | எகாரச் சத்தம்<br>****************<br><br>நாட்டு மெகாரப்பே ரானுடைய சென்னி முயல்<br>ஊட்டுங்கை வல்லூ றுடலாந்தை - காட்டிடுமுன்<br>பின்னாகுங் காகம் பொருத்ததோர் கோழிக்கால்<br>நன்னாவலரே நவில் ஒஅஇஉஎ. |
| 94 | ஒகாரச் சத்தம்<br>****************<br><br>நவிலுமொ காரப்பேர் நாள்சேர் தலைவலியன்<br>கவிலுங் கையாந்தையுடல் காகமே - புவியிலே<br>தேனேமுன்பின் கோழி தேவர்க் கெலாமடுக்கு<br>மானே மயில்காண் மதி அஇஉஎஒ. |
| 95 | அமிர்த நிலை<br>****************<br><br>பிரதமை - அடி<br>*****************<br><br>காலடியாம் வல்லூறு கணைக்காலு மாந்தையாம்<br>மேலெழுந்த தானும் வெண்காகமாம் - மாலார்<br>படிக்குறங்கு கோழியாம் பணவல்குல் மாதே<br>முடிக்கு மயிலென்றே மொழி. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 96 | துதிகை - பரடு<br>****************<br><br>அறியும் பரடு வல்லூ றாகுமாந்தோழி<br>முறியாந்தை மேற்கண்டை முன்னே - சரியா<br>அணி முழந்தாள் காகமது தொடையே கோழி<br>மணி குய்ய மஞ்ஞை யெனவை. |
| 97 | திரிதிகை - கணைக்கால்<br>****************************<br><br>கணைக்காலாம் வல்லூறு கால்கெண்டை யாந்தை<br>பணைக்கு முழந்தாள் பகர்காகம் - கணித்த<br>தொடையாகுங் கோழி துய்யமயின் மெல்லி<br>கடையு மடை துணையாங் காண். |
| 98 | சதுர்த்தசி - முழந்தாள், இடை<br>**********************************<br><br>வல்லூ றிடுப்பு வளர்முதுகுந் தானாந்தை<br>கல்லாத மேன்முதுகு காக்கையாம் - சொல்லரிய<br>கோழி பிடரி மயில் கைப்பட்டைக் கூறியதன்<br>தோழியினிய தெனச் சொல். |
| 99 | பஞ்சமி - துடை, உந்தி<br>**************************<br><br>வல்லூறே யுந்தி வயிறாந்தை மார்புகொடி<br>அல்லாரு மென்முலையா மங்கோழி - தொல்லுலகில்<br>வண்ணமயில் கைக்கீழா மட்டவிழுங் கார்குழலாய்<br>பண்ணவர்கள் சொன்னார் பரிந்து. |
| 100 | சஷ்டி - நிதம்பம், கீழ் வயிறு<br>********************************<br><br>கீழ்வயிறு வல்லூறு கேள் வயிறுமாந்தையாம்<br>வாழ்மார்புங் காகமெனும் வானுதலாய் - தாழ்வில்<br>வழுவிலாக் கோழி மயிலிருப்பிடம் வல்லூ<br>றெழுவிலா வென்றே யியம்பு. |

முன்னுரை | பொருளடக்கம்

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 101 | சப்தமி - இடை, கீழ்முதுகு<br>******************************<br><br>கீழ்முதுகு வல்லூறு கிளர்மேன் முதுகாந்தை<br>வாழ்பிடரி காகமாம் வானுதலாய் - கோழி<br>வல்விலாத் தோகை மயிலாமிடம் வலத்தே<br>யில்விலா வென்றே யியம்பு. |
| 102 | அஷ்டமி - உந்தி, வயிறு<br>****************************<br><br>வல்லூறுதான் வயிறாம் வல்லாந்தை மார்பாகுஞ்<br>சொல்லறிய காக முதுகாகும் - புல்லியே<br>கோழியிடை விலாக் கோலமிகு மாமயிலே<br>தோழிவல விலாச் சொல். |
| 103 | நவமி - மார்பு, வயிறு<br>*************************<br><br>கிழியாத மார்வலியான் சுவைதோளி ரண்டாந்தை<br>முழுதுடன்முன் காகம் பின்கோழி - பழுதறவே<br>காலாகு மஞ்ஞையெனக் காமுகர்க்குக் காசினியில்<br>மேலான நூலிதென்று மேவு. |
| 104 | தசமி - கை<br>*************<br><br>கையிரண்டும் வல்லூறு கழுத்து மேலாந்தை<br>மெய்யுடைய முன்காகம் பின்கோழிப் - பையத்<br>துடையிரண்டுந் தோகைமயிற் றூயமொழி யாய்ந்து<br>வடிவமொன்று மானிடர்க்கு வை. |
| 105 | ஏகாதசி - பாளியங்கை<br>***************************<br><br>பாளியாம் வல்லூறு பருமுன்கை யாந்தைக்<br>காளு முழங்கைக் கருங்காகம் - காளைக்கே<br>கொண்டையாங் கோழி கிளர்தோண் மயிலாகும்<br>தண்டமிழ் வல்லாய் நீசாற்று. |

முன்னுரை | பொருளடக்கம்

| | |
|---|---|
| 106 | துவாதசி - விரல்<br>*******************<br><br>மூட்டுவிரல் வல்லூறு முழுவிரலா மாந்தையது<br>நேட்டவிரல் காகமா நேரிழையீர் - காட்டாணி<br>மோதிரமாங் கோழி முன்கண்டு தோகையதாம்<br>ஆதரவாய் சொன்னோ மறி. |
| 107 | திரயோதசி - கழுத்து<br>***********************<br><br>வல்லூறுவன் கழுத்து வல்லாந்தை வாயாகும்<br>மெல்லியலுங் காகம் விழியிரண்டாம் - சொல்லரிய<br>கோழியது நெற்றிக் குலவுமயில் கூந்தல்<br>ஆழி யுலத்தா யறி. |
| 108 | சதுர்த்தசி - தலை<br>********************<br><br>செய்யதலை வல்லூறு சீரார்முது காந்தை<br>கையிரண்டும் காகமாங் கண்டாயே - மொய்குழலாய்<br>நாபியாங் கோழி நலமான தாளிரண்டுந்<br>தோகை மயிலென்றே சொல்லு. |
| 109 | பூரணை - கூந்தல்<br>********************<br><br>கூந்தன் மயிலாகுங் கோழியதே நெற்றியதாம்<br>வாய்ந்த செவிகண்மூக்கு வாழ்காகம் - ஏந்திழையீர்<br>வாயாகு மாந்தை கணிக்கழுத்தே வல்லூறு<br>மாயா துரைக்கும் வகை. |
| 110 | பட்சியின் வயது<br>******************<br><br>கோழிக்கு நாலுநாள் குவலயத்திலே மிக்க<br>வாழுமடவல்லூறுக் கைந்தே நாள் - தோழிகேள்<br>காகமிரண்டாங் காராந்தை மூன்றாகும்<br>தோகை மயிலொன் றென்றே சொல். |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 111 | நட்சத்திரப் பட்சி<br>*******************<br><br>ஆதியசுவமுடனைந்து நாள் வல்லூறு<br>கோதிலாவாறு நாள் கொம்பாந்தை - தீதிலா<br>உத்திரங் கொண்டைந்துநா ளொன்காக மாங்கோழி<br>பத்தனுஷமோண மயில் பார். |
| 112 | ஆரூடக் கணிதப் பட்சி<br>**************************<br><br>அஞ்சுடன் வல்லூற்ண்ணு மாறுடனாந்தை யென்பார்<br>துஞ்சிலாக் காகமைந்தாஞ் சுகம்பெறு மவையேகோழி<br>நெஞ்சினில் மயிற்றானாறு நினைந்தநாண் முதலாயெண்ணிக்<br>கொஞ்சி வையகத்திற்பேசக் குலவு மினிருபத்தேழே. |
| 113 | வளர்பிறை - இராப்பட்சி<br>****************************<br><br>ஆடரிதேள்வல்லூ றானதனுமீன் காகம்<br>கூடுதுலா மேறுங் கோழியதாந் - தேடரிய<br>நண்டரிவை தண்டாந்தை நன்மகரங் கும்பமிவை<br>கண்ட மயிலென்றொதிக் காண். |
| 114 | தேய்பிறை - இராப்பட்சி<br>****************************<br><br>ஆனமயில் கடக  மாடுதே ளாகுங்கா<br>ணானதரி வையாங் கோழி - மானே கேள்<br>காகமது காதுகுடங் கைச்சிலைமீன் பாழாந்தை<br>பாகவல்லூ றேறுநிறை பார். |
| 115 | பட்சிகளின் கணித இலக்கணம்<br>***********************************<br><br>வல்லூறு<br>**********<br><br>பேதையாம் வல்லூறு பேசாது மூன்றறையும்<br>ஓதிய ஒன்றறையி லுண்டேகும் - மாதேகேள்<br>அஞ்சுமரையினி லொன்றாமே யரசு நிலைச்<br>செஞ் சொற்றுணிவாற் றெளி. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 116 | ஆந்தை<br>*********<br><br>துணைப்பிரிந்து தேடுந் துணைச் செயலொன்றரை<br>உணவறிந்தொன்றரையி லுண்ணும் - பிணியாலே<br>கூர்ந்தூங்கலீராந்தற் கோரனெய் தென்பரே<br>ஆந்தைக் கர சரையிலாம். |
| 117 | காகம்<br>*******<br><br>துஞ்சும்போதொன்றரையாந் துய்யநடையிரண்டு<br>மிஞ்சியயரசாளு மேலொன்று - வஞ்சியரே<br>சேக்கையே நீக்கச் சிறுபோசன மொன்றாங்<br>காக்கைக்கே சொன்னார் கணி. |
| 118 | கோழி<br>********<br><br>குற்றமில்லா வொன்றரையிற் கோழி துணைகூடு<br>மற்றுமோறொன்றரையில் வாப்பூசும் - வெற்றி<br>யரசாளுமொன்றி லழியுமே யொன்று<br>நிறையாவ தொன்றாய் நினை. |
| 119 | மயில்<br>*******<br><br>எடுக்குங் கடிகை யிரண்டரையுமாக<br>நடக்குமரை யிரண்டின் வல்லூண் - அடுக்கும்<br>அரசாளுமொன்றி லடநித்திரை யொன்றில்<br>நரை சாவொன்ரேன்றே நவில். |
| 120 | பட்சி நாழிகை மாற்று<br>************************<br><br>அஞ்சு பறவையுமோ ராறு கடிகையினும்<br>எஞ்சவுண்டு துஞ்சிடுமென் றெண்ணாதே - வஞ்சியரே<br>ஒன்றொன்றே நாளாறு கடிகையினிலே யுண்ணும்<br>என்றென்றே சொன்னா ரெமக்கு. |

# அகத்தியர் பஞ்சபட்சி



| | |
|---|---|
| 121 | பட்சி பாகம்<br>**************<br><br>சேனைதிசை கனகதிசை சீரதாகச்<br>சிங்க திசையானை திசைப் பேசொணாத<br>பூனை திசையாவு திசை யெலியினோடு<br>பொருந்து முயற் றிசையெட்டும் பொலியும் பட்சி<br>மோனமென்னுஞ் சூக்ஷ திசை நாளதாக<br>முன்றினமே பிராண திசை யுண்மையாகப்<br>பானமொழி மடமாதே பட்சி பாகம்<br>பகர்ந்திடு வரைந்தொழிலின் பலன் கடாமே. |
| 122 | மகாதிசை ஆண்டு<br>********************<br><br>உண்டி நடை யைந்தாகி லிருபத்தைந்தா<br>முழு தூக்கம் சாவானா லைந்தாகும்<br>கண்டவிரு பதினைந்து மாகக் கூட்டி<br>மகாதிசை நூறாண்டந்திரதி சையாந் திங்கள்<br>விண்டநாள் சூக்கும திசை பிராண திசைநாள்<br>விளங்கிய பஞ்சாங்க முறையே வல்லார்<br>அண்டருக்கு மேலாகு மாயுள் காணா<br>ரலை கடல் சூழவனியெல்லா மறிவதாமே. |
| 123 | தையிருபத்தெட்டரை மேற் தனுசு கும்பம்<br>தான்கால்மீன் விருச்சிகமே முக்காலாகும்<br>மைதுலையுமிருமுக்கால் ரிடபங் கன்னி<br>வருமிரண்டோ டொருகாலு மிதுனஞ் சிங்கம்<br>எய்யுமிரண்டே முக்கால் கடக மூன்றும்<br>இயம்பினது பகல் அகசு கடிகையாகும்<br>ஐயமதி யறுபதிலே செல்லு போக<br>அன்றிரவுக் குள்ளதைநீ யறிந்து கொள்ளே. |

| | |
|---|---|
| 124 | ஒன்றரையொன்றேகா லொன்று முக்காலரையாம்<br>நின்றது கையை நிலைநிறுத்தி - நன்றாக<br>வட்டமொக்கவே கூட்டி மாளிகைக்குள் ளேயிருந்து<br>தொட்ட விரனாழிகையாய்ச் சொல். |
| 125 | சுட்டுவிரன் மடக்கி சூரியனைத் தன்வலமாய்<br>எட்டும் விரலை யிரட்டித்து - முட்ட<br>அடியளந்து பார்ப்பதன்முன் னாராய்ந்து சொல்லும்<br>குடியறிந் தெந்நாளுங் கூறு. |

## அகத்தியர் பஞ்சபட்சி இத்துடன்

## நிறைவுற்றது.